**PERSIDANGAN TAHUNAN TAMIL, GEREJA METHODIST MALAYSIA**

**தமிழ் வருடாந்திர மாநாடு, மலேசியா மெதடிஸ்ட் திருச்சபை**

**TAMIL ANNUAL CONFERENCE, METHODIST CHURCH IN MALAYSIA**

# த.வ.மா.அத்தியட்சரின் அறிக்கை

# 47ஆவது அமர்வு




கருப்பொருள்:

உலகத்திற்கு உப்பாகவும், ஒளியாகவும் இருந்து தேவ மகிமையைத் தேடு

நாள்: நவம்பர் **11 - 13, 2022**

இடம்: கிந்தா ரிவர்பிரண்ட் விடுதி, ஈப்போ

# தமிழ் வருடாந்திர மாநாட்டின் 47வது அமர்வு

# மலேசியாவின் மெதடிஸ்ட் திருச்சபை

# தவமா அத்தியட்சரின் உரை

# உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் இருந்து தேவ மகிமையை தேடு

நமது கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். நமது 47வது அமர்வின் அனைத்து ஆய்வுகளும் மற்றும் கலந்தாலோசனைகளும் தேவனுக்கு மகிமையை கொண்டுவர நான் ஜெபிக்கிறேன். இந்த ஆண்டின் வருடாந்திர மாநாட்டை ஏற்பாடு செய்த பேராக் மாகாணத்திற்கு நமது நன்றி.

இந்த வருடம், சொத்து மற்றும் பொருளாதார காரியங்களை மேலும் ஐக்கிய குழுக்களை பற்றிய தகவல்களை நான் அறிக்கையில் சமர்ப்பிக்கவில்லை, காரணம் இவைகள் அதனதன் தலைவர்களால் விவரங்களோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம், நாம் வளர்ச்சி குழு செயல்திட்டத்தில் கவனம் செலுத்த வேண்டும், வருடாந்திர மாநாடாக இதை நாம் முழுமனதோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். நமது தமிழ் வருடாந்திர மாநாட்டின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்ய இது இன்றியமையாத ஒரு படி.

1. <u>தேவன் அருளிய மாநாட்டு கருப்பொருள் நமது ஸ்தல சபைகளில் செயலுருவாக வேண்டும்</u>

- கடந்த ஆண்டு, நமது அனைத்து ஸ்தல சபைகளும் கர்த்தருக்குள் காத்திருந்து நாம் நாட்டப்பட்டுள்ள சமுதாயத்தில் உலகத்தின் உப்பாகவும் ஒளியாகவும் எப்படி இருப்பது என்று தேவனுடைய வழிகாட்டுதலை நாடி காத்திருக்க நாம் கேட்டுக்கொண்டோம்.
- ஓவ்வொரு ஸ்தல சபை போதகரும் மற்றும் உக்கிராணக்குழு தலைவர்களும் எப்படி உப்பாகவும் ஒளியாகவும் சமுதாயத்தில் விளங்குவது என்று கண்டறிய கர்த்தருக்குள் காத்திருக்க நாம் கேட்டுக்கொண்டோம்.
- நமது தவமா சபைகள் இதற்கு முன் சென்றிராத வழியில் நாடிச்சென்றுக்கொண்டிருப்பதை கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இது நன்மையானது இன்னும் தொடரவேண்டும்.
- ஆனாலும், இன்னும் சில சபைகள் தங்களுக்குள்ளாகவே காரியங்களை செய்துக்கொண்டு திருப்தியடைந்துக்கொண்டிருக்கிறார்கள். இதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு.
- சிலர் தங்களுக்கு வளங்கள் இல்லையென என நினைக்கிறார்கள் அல்லது தேவையான வளங்களை பெற சற்று முன்செல்வதற்கு தயராக இல்லை.
- சில சபை தலைவர்கள் செய்ததையே திரும்ப ஒவ்வொரு வருடமும் செய்துக்கொண்டிருப்பதில் திருப்தியடைகிறார்கள், அதிலிருந்து மாற அவர்கள் விரும்பவில்லை. இது கவலைக்குரிய காரியம், காரணம் தங்கள் சொந்த அங்கத்தினர்களே போதகர்களும் தலைவர்களும் சபையை சமுதாயத்தில் பெரிய காரியங்களில் வழிநடத்த எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

- மேலும் சில சபைகள், மாநாட்டு செயல்திட்டம், தொலைநோக்கு மற்றும் வழிகாட்டுதல் வெறும் தெரிவுகள் ஆகவே அவைகளில் கவனம் செலுத்த தேவையில்லை என நினைக்கின்றனர்.

**2.** <u>நமது அனைத்து ஆராதனைகளிலும் கூட்டங்களிலும் தேவனிடம் புதிய ஆத்துமாக்களை கேட்பது.</u>

- இவ்வருட ஜனவரியில் நமது அனைத்து சபைகளுக்கும் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல், இது சுவிசேஷ வாரிய ஜெப நேரத்தில் கர்த்தரிடமிருந்த வந்ததாக நமக்கு உணரப்பட்டது. ஜூன் மாதம் நமது அனைத்து சபைகளுக்கும் இதைக்குறித்தான நினைவூட்டல் அனுப்பப்பட்டது.
- சில சபைகள் இதை விசுவாசமாக செய்துக்கொண்டு வருகிறார்கள், இதற்காக நான் அவர்களை பாராட்டுகிறேன். அவர்கள் நிச்சயமாகவே தேவனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள், காரணம் அவர் முன்னமே நமக்கு மத்தேயு 7:7ல் கூறியிருக்கிறார், நாம் கேட்பதை அவர் செய்வார் என்று.
- இருப்பினும், இன்னும் சில சபைகள் இதை பொருட்டாக எண்ணவில்லை. உக்கிராணக்குழுவினர் 5 நிமிடம் கூட சபையின் முதல்நிலை பணியான சுவிசேஷ தேவைகளுக்காக ஜெபிக்காவிட்டால், ஸ்தல சபை எப்படி வளர்ச்சியையும் புது ஆத்துமாக்கள் சேர்த்துக்கொள்ளப்படவும் எதிர்பார்க்க முடியும்.
- தேவன் இல்லாமல் நாம் வளரவும் மேம்படவும் முடியும் என்று எண்ணி நாம் ஆணவம்கொண்டிருக்கிறோமா?

**3.** <u>போதகர்கள் தேவைப்படும் சபைகள்</u>

- புதிய வாலிபர்களை முழு நேர ஊழியத்துக்கு உற்சாகப்படுத்த, போதகர்களுக்கும் ஸ்தல சபை தலைவர்களுக்கும் மிக தீவிரமான தேவை உண்டு. மத்தேயு 9:37-38ல் இயேசு கற்பித்ததுபோல இதற்காக நாம் யாவரும் ஜெபிக்க நான் கெஞ்சுகிறேன்.
- தற்போது, பணி ஓய்வுபெற்ற போதகர்களையும், மூப்பர் போதகர்களையும் மற்றும் மாணவ போதகர்களையும் நாம் அதிகமாக சார்ந்திருக்கிறோம். நாம் இவர்களின் பங்களிப்புக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.
- தற்போது, அதிகதிகமான சபைகள் போதகர்களை பகிர்ந்துக்கொண்டிருக்கின்றனர். நியமன வாரியம் அநேக சமயங்களில் ஸ்தல சபைகளிலிருந்து வரும் விண்ணப்பங்களை பூர்த்திசெய்ய இயலாத சூழலில் இருக்கிறது.
- மூப்பர் வழி நடத்தும் சபைகள் நமது அடுத்த தேர்வாக நாம் சிந்தித்துள்ளோம். இம்மட்டும், சபைகள் தங்கள் அங்கத்தினர்களுக்கு STM மற்றும் நமது சொந்த மூப்பர் பள்ளியில் தேவைப்பட்ட பயிற்சியை கொடுத்து அவர்களை தயார்படுத்துவது நன்மையாயிருக்கும்.
- நாம் மேற்கொள்ளப்போகும் வளர்ச்சி குழு உருவகம், நமது அனைத்து அங்கத்தினர்களும் அவர்களது போதக தேவையை சந்திக்க வாய்ப்பளிக்கும்.

**4.** <u>நமது அனைத்து போதகர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் ஜெபிக்க நினைவுகூர்தல்</u>

- நமது அனைத்து போதகர்களும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட இடங்களில் அயராது உழைக்கின்றனர். நமது ஸ்தல சபைகளையும் நமது வருடாந்திர மாநாட்டையும்

ஆசீர்வதிக்க தேவன் பயன்படுத்தும் கருவிகள் இவர்கள். நாம் இவர்களுக்காகவும் இவர்கள் குடும்பங்களுக்காகவும் தினமும் ஜெபிக்க வேண்டும்.

- மறைதிரு வின்சன் ராயர், அவரது மனைவி திருமதி நிர்மலா, மறைதிரு குணபாலன் மற்றும் போதகர் ஜோன் மதுனி அவர்களை நாம் தொடர்ந்து நமது அன்றாட ஜெபங்களில் நினைவுகூறுவோம். இவர்கள் நன்கு தேறிவருகிறதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். விபத்தில் சிக்கி தேறிவரும் போதகர் ஜேக் அவர்களுக்காக தொடர்ந்து ஜெபித்துக்கொள்வோம்.
- துக்கத்தில் இருக்கும் காலஞ்சென்ற மறைதிரு T.D. பீட்டர் மற்றும் மறைதிரு டேவிட் தர்மக்கண் அவர்கள் குடும்பங்களுக்காக நாம் தொடர்ந்து ஜெபித்துக்கொள்வோம். இவர்கள் இருவரும் தவமா வலுவான தூண்களாக ஒரு சமயத்தில் இருந்துள்ளனர்.

**5.** <u>ஸ்ரீ லங்கா மற்றும் தென் மாகாண விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவ அழைப்பு</u>

- நமது அனைத்து சபைகளும் கொடுத்த உற்சாகமான மறுமொழிக்கு நாம் உண்மையாகவே தேவனுக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்.
- சபைகளிலிருந்து இந்த குறிப்பிட்ட காரணத்துக்காக கிடைக்கப்பெற்ற அனைத்து பணங்களையும் நாம் அந்தந்த நோக்கத்துக்காக கொடுத்துவிட முயற்சி எடுக்கிறோம் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.
- சில குறிப்பிட்ட காரணங்களுக்காக மட்டும் அதாவது, சில சபைகள் தங்கள் பணத்தை தாமதமாக அனுப்பி வைக்கும்போது (நிறைவு நாள் முடிந்து ஒரு மாதம் கழித்து), நாம் அந்த பணத்தை சமூக சேவை பேரிடர் நிவாரண நிதிக்கு திருப்பிவிடுகிறோம். இதற்கு காரணம் அந்த விசேஷித்த கணக்கறிக்கை மூடப்பட்டும் தணிக்கை செய்யப்பட்டும் ஆகிவிட்டது.
- ஸ்ரீ லங்கா நிவாரண நிதியின் கணக்கறிக்கையை மலேசிய அருட்பணி இயக்கத்தின் அறிக்கையில் காணலாம்.
- தென் மாகாணத்தில் விபத்தில் சிக்கியவர்களுக்கான நிதி அறிக்கையை சமூக சேவை வாரிய அறிக்கையில் காணலாம்.
- பாக்கிஸ்தான் வெள்ள நிதி இன்னும் செயலில் இருக்கிறது, அது MCRD கீழ் இருக்கிறது, நாம் நமது ஆதரவை அவர்களுக்கும் கொடுப்போம். அவர்கள் தங்கள் முதற் பயணத்தை மேற்கொண்டு அங்குள்ள ஸ்தல பங்காளிகளை அடையாளம் கண்டுள்ளனர்.
- மீண்டுமாக, தாராளமாக மற்றும் உடனடியாக மறுமொழிகொடுத்த அனைத்து சபைகளுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**6.** <u>மலேசியாவில் மெதடிஸ்ட் திருச்சபை</u>

- ஆகஸ்டில் போர்ட் டிக்சன் மெதடிஸ்ட் மையத்தில் நடந்த பொது மாநாட்டின் விசேஷித்த அமர்வுக்காக நாம் தேவனுக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நாம் வாழும் இந்த மாற்றமடைந்த காலத்திற்கு ஏற்ப சில முடிவுகள் எடுக்கப்பட்டன.
- இந்த மாற்றத்தின் கண்ணோட்டத்தில், புதிய மெதடிஸ்ட் ஒழுங்கு பிரசுரிப்பில் உள்ளது, கூடிய விரைவில் நமக்கு கிடைக்கும்.

- நமது ஊழிய வாரியம், திருமணத்தை குறித்தான சட்டங்களை தவமா எப்படி பயன்படுத்தும் என்பதை குறித்து அறிக்கையில் வெளியிடும். சில பிரிவுகளில் நாம் வேறுபடவேண்டியுள்ளது.
- ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள திருமணத்திற்கு முன்னான ஆலோசனை புத்தகத்திற்கு நமது நன்றி. மறைதிரு சாமி தாஸ் மற்றும் திருமதி ஜேனட் தேவராஜி, இந்த புத்தகம் வெளியிடப்பட உதவிய குழுவில் அங்கம் வகிக்கின்றனர். திருமதி மெர்சியிடமிருந்து இதை தயவுசெய்து பெற்றுக்கொள்ளுங்கள்.
- நமது அனைத்து சபைகளும் மெதடிஸ்ட் கல்வி கடனுதவி நிதியிலிருந்து பயன்பெறுமாறும் மற்றும் அதற்கு பங்களிக்கவும் நான் கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு ஆண்டு ஏப்ரலில் இதற்கான விளம்பரம் வெளிவரும். நமது தவமா மாணவர்களில் பலர் இதிலிருந்து பயனடைந்துள்ளனர்.
- சிலர் மெதடிஸ்ட் நாட்குறிப்பை முன்பதிவு செய்ய தாமதித்ததனால், இவ்வருடம் அதை பெற்றுக்கொள்ள இயலாது. ஏமாற்றத்தை தவிர்க்க முன்பதிவை விரைவாக செய்யுங்கள்.
- மறைதிரு ஜேம்ஸ் ரவீந்தரன் மற்றும் சகோ. ரெபெக்கா ஜெயந்தி (தமெதி உளு கிளாங்) நீதிதுறை மன்றத்துக்கு தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- திருமதி ரேச்சல் ஜேம்ஸ் (தமெதி தமிழ் செட்டல்மண்ட்) ஒழுங்குமுறை ஆய்வு மன்றத்தில் நியமிக்கப்பட்டுள்ளார்.
- நமது நிதி வாரிய தலைவர் திரு அகஸ்டஸ் ஜெரமியா, AEC (P) நிர்வாக மற்றும் மனித வள குழுவுக்கு தலைவராக இருப்பதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.
- சித்தியவானில் நடக்கும் பூர்வ குடியினர் ஊழியத்துக்கு நமது அனைத்து சபைகளும் ஆதரவு அளிக்க நான் கேட்டுக்கொள்கிறேன். மேலும் தகவல்கள் விரைவில் கொடுக்கப்படும்.

7. <u>சிசிஎம் இந்திய ஊழிய செயற்குழு, இந்திய சபைகளின் ஐக்கியம், (**FIDC**) மற்றும் மலேசிய இந்திய கிறிஸ்துவ தலைவர்களின் ஆலோசனை மையம் (**CICLM**)</u>

- சிசிஎம் பொது செயலாளராக மறைதிரு ஜோனத்தன் ஜேசுதாஸ் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளதற்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். ஒரு தவமா போதகர் இந்த முக்கிய பதவியில் இருப்பது மிகவும் பெருமைக்குரியது. அவர் ஈடுபட்டுவந்த மதங்களுக்கிடையிலான பங்கேற்பு நிச்சயமாக நமது அனைத்து சபைகளின் நன்மைக்கு பயனாக அமையும் என நாம் நம்புகிறோம்.
- சிசிஎம் இந்திய ஊழிய செயற்குழு தற்பொழுது ஆங்கிலிக்கன் சபையை சார்ந்த மறைதிரு ஐசெக் பாண்டியநாதன் அவர்களால் தலைமைத்தாங்கப்படுகிறது. இளம் போதகர்களுடன் பிரிக்பீல்ஸில் உள்ள சீயோன் சபையில் இவ்வருடம் ஒரு கூட்டம் வைத்திருந்தோம். 30 ஜூலை zoom வாயிலாக இணைந்து ஜெப வேளையை நடத்தினோம்.
- CICLAM (மலேசிய இந்திய கிறிஸ்துவ தலைவர்களின் ஆலோசனை மையம்) அடிக்கடி கூடும் அங்கீகரிக்கப்பட்ட மன்றம். அதன் முக்கிய நோக்கம் மலேசியாவில் உள்ள

அனைத்து தமிழ் சபைகளையும் ஒன்றிணைத்தல். மறைதிரு டேவிட் ராஜையா (ஆங்கிலிக்கன்) இதன் தற்போதைய தலைவர்.

- FIDC (இந்திய சபைகளின் ஐக்கியம்) மலேசியா மற்றும் சிங்கப்பூர் இந்திய சபைகளை ஒன்றிணைக்கும் ஒரு மன்றம். இந்த வருடம் நடைபெற்ற ஆண்டுக்கூட்டத்தில் மறைதிரு ஜேம்ஸ் நகுலன் ETAC தலைமைத்துவத்துக்குள் வந்தார்.
- நாம் யாவரும் தேவனுடைய மகிமைக்காக நம்மை சுற்றி இருக்கும் அனைத்து சபைகளுடனும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும், அவர்கள் வேறு பிரிவை சேர்ந்தவர்களாயிருப்பினும்.

8. தேசிய நலன்கள்

- அரசியல் பகுதியில், நெருங்கிவரும் பொது தேர்தலுக்காக நாம் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். நமது அனைத்து அங்கத்தினர்களும் பதிவுசெய்திருக்கவும் 19 நவம்பரில் வாக்களிக்கவும் உறுதிசெய்துக்கொள்ளுங்கள்.
- நமது அனைத்து ஞாயிறு ஆராதனைகளிலும் அனைத்து சபைகளும் நமது தேசத்துக்காகவும் அதன் நல் வாழ்வுக்காகவும் ஜெபிக்க நான் கேட்டுக்கொள்கிறேன். நமக்கு நல்ல நேர்மையான தலைவர்கள் கிடைக்க நாம் தேவனிடம் கேட்க வேண்டும்.
- ஒவ்வொரு வருடமும் நான் வலியுறுத்தியதுபோல, நமது அனைத்து சபைகளும் தங்கள் பகுதியில் உள்ள சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினருடன் செயலாற்ற முயற்சிசெய்ய நான் நினைவுறுத்துகிறேன். நாம் அவர்களை சந்திக்க வேண்டும், அவர்களுடன் ஈடுபட வேண்டும், நமது ஜெப ஜீவிய குழுக்களில் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

9. முன் நோக்கி பார்ப்போம்

- நமது சீஷத்துவ செயல்பணியை, வளர்ச்சி குழுக்களின் வாயிலாக நமது அனைத்து சபைகளிலும் ஆழப்படுத்துவது, வரும் ஆண்டுகளில் நமது முன்னனி நோக்கமாக இருக்கும். இத்துடன் அது இணைக்கப்பட்டிருக்கிறது.

அங்கீகாரம்

- அத்தியட்சர் டி. ஜெயக்குமார் அவர்களுக்கு, அவரது நட்பிற்காக, வழிகாட்டுதலுக்காக, உதவிக்காக மற்றும் ஜெப ஆதரவுக்காக என் மனமார்ந்த நன்றி. மற்ற அனைத்து மாநாட்டு அத்தியட்சர்களுக்கு அவர்களது ஒற்றுமைக்கும் அருமையான ஐக்கியத்துக்கும் எனது நன்றி.
- தங்களது சிறந்ததை தேவனுக்கு கொடுத்த, நமது அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும், மாநாட்டு செயலாளர், மாநாட்டு பொருளாளர், அனைத்து வாரிய தலைவர்கள் மற்றும் அனைத்து குழுக்களின் தலைவர்கள் யாவருக்கும் எனது நன்றி, தங்களது நேரத்தை தேவனுக்காக அர்ப்பணித்து கொடுப்பதை நான் காண்கிறேன்.
- திரு செல்வராஜ் மற்றும் அவரது இரண்டு உதவியாளர்கள் எப்பொழுதும் உற்சாகப்படுத்திக்கொண்டுள்ளார்கள்.

- நமது அலுவலக பணியாளர் சகோ மெர்சி, சகோ நேசமலர் மற்றும் சகோ ஷேக்ஸ்பியர் அவர்கள் பெரிதான ஆதரவை தருகிறார்கள். சகோ ஜேசு கூப்பிடும்போதெல்லாம் தயாராக ஒத்துழைக்கிறார்.
- எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் அடிக்கடி ஜெபிக்கும் யாவருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

அவரது அழைப்பை என் வாழ்வில் நிறைவேற்ற தினமும் பெலனையும் ஞானத்தையும் கொடுக்கும் தேவனுக்கு மட்டுமே எல்லா மகிமையும், துதியும், கனமும் உண்டாவதாக.

தாழ்மையுடன் சமர்ப்பித்தது,
அவரது கிருபையில்,
மறைதிரு டாக்டர் டென்னிஸ் ராஜ்
தமிழ் வருடாந்திர மாநாடு
மலேசியாவின் மெதடிஸ்ட் திருச்சபை

தமிழ் வருடாந்திர மாநாடு

ஸ்தல சபைகளில் வளர்ச்சி குழுக்கள்

இம்மட்டுமாக, நமது மாநாட்டில் உள்ள அநேக ஸ்தல சபைகள் ஒரு படிமத்தை மட்டுமே அதாவது வாரந்திர ஊழியங்களை பின்பற்றி வருகின்றன. ஒவ்வொரு வாரமும், நமக்கு ஞாயிறு ஆராதனை, ஒரு வேத ஆராய்ச்சி, ஒரு ஜெப ஜீவிய கூட்டம், ஒரு வட்டார ஐக்கியம், மற்றும் ஒரு நாள் போதகர் சந்திப்பு என்று இருக்கும். வெளிப்புறத்திற்கு இது போதுமானதாயிருந்தாலும், பொதுவாக, மிக குறைவானவர்களே ஜெப ஜீவிய கூட்டத்திற்கும் வேத ஆராய்ச்சிக்கும் வருகின்றனர். சில வேளைகளில், வட்டார ஐக்கிய கூட்டங்கள் பிறந்தநாள், திருமண நாள் மற்றும் ஞாபகார்த்த நாள் அனுசரிக்கும் இல்லங்களில் கூடுகிறது. சீஷத்துவத்துக்கான தளங்களின் குறைவுக்கு தீர்வுகாண, நாம் நமது ஸ்தல ஊழியங்களை மேம்படுத்த நமது செயல்முறையில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வரும் ஆண்டுகளில், வளர்ச்சி குழுக்கள் படிமம், நமது அங்கத்தினர்களை சீஷத்துவத்துக்குள் நடத்தவும், நமது அங்கத்தினர்களின் ஆவிக்குரிய நிலை வளரசெய்யவும் தேவையாயிருக்கிறது, ஸ்தல சபைகளில் ஆவிக்குரிய தலைமைத்துவமும், நமது அங்கத்தினர்களிடையே ஆழமான ஐக்கியமும் தேவையாயிருக்கிறது. முடிவில், ஒவ்வொரு வளர்ச்சி குழுவும் வளரும் மற்றும் புதிய தலைவர்களுடன் புதிய வளர்ச்சி குழுக்கள் உருவாகும். நமது சொந்த அங்கத்தினர்கள் மத்தியிலேயே நாம் பொருத்தமற்றவர்களாகிவிடாமல் இருக்கும்படியாக, நாம் செய்யும் சீஷத்துவத்தில் நாம் மாற்றங்களை கொண்டு வருவது அவசியமாயிருக்கிறது. அதிலும் மோசமாக, விளைவுகளை பற்றி சிந்திக்காமல், நாம் செய்ததையே செய்து செய்து, நமது அங்கத்தினர்கள் மத்தியில் சரிவையும் ஏமாற்றத்தையும் கொண்டுவந்து விடுகிறோம்.

<u>நமது அனைத்து ஸ்தல சபைகளிலும் ஏன் வளர்ச்சி குழுக்கள் தேவையாயிருக்கின்றன.</u>

- தற்போது, நமது அங்கத்தினர்கள் மத்தியில் பொதுவாக ஆழமான சீஷத்துவம் கிடையாது. நமக்கு அதிகமான தலைமுறை கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர், இவர்கள் தேவனுடனான தங்கள் அன்றாட பாதையில் ஆவிக்குரிய அனுபவத்தில் குறைவுள்ளவர்களாக இருக்கின்றனர்.
- வேதத்தினுடனான ஆழமான இணக்கத்திலும் குறை உண்டு. நமது அங்கத்தினர்களில் அநேகர் வாரத்திற்கு ஒரு தேவசெய்தியை மட்டும் கேட்டுக்கொண்டு அது மட்டும் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு போதும் என நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.
- ஆழமாக ஐக்கியத்தில் குறை உண்டு. ஆராதனைக்கு பின் உள்ள நேரம் இணக்கமான ஐக்கியம் கொள்ள மிக குறைவானது மற்றும் பெரும்பாலான சமயங்களில் இது மேலோட்டமானதாயிருக்கும்.
- ஸ்தல உக்கிராணக்குழுவில் புதிய ஊழிய பணியை ஏற்றுக்கொள்ள புதிய தலைவர்கள் குறைவாக உள்ளதை நாம் காண்கிறோம்.

- பெரும்பாலான சபைகளில், ஸ்தல தலைவர்கள் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை கொடுக்கமுடியாத நிலையில் இருக்கின்றனர், அவர்கள் நிர்வாகத்தை கவனிப்பவர்களாக மட்டுமே இருக்கின்றனர்.

- அநேக சமயங்களில், அனைத்து அங்கத்தினர்களின் ஆவிக்குரிய தேவைகளை பராமரிக்கும் முழு பாரம் போதகரின் மேல் விழுகிறது.

- நமது கூட்டங்களை பரவலாக்குவது பெரும் உதவியாகவும், அதை எளிதில் செய்யமுடியும் என்பதையும், பெருந்தொற்று நமக்கு கற்றுக்கொடுத்திருக்கிறது.

<u>வளர்ச்சி குழுக்களை சபைகள் எவ்வாறு ஏற்பாடு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது?</u>

- சபை உக்கிராணக்குழுவினரும் போதகரும் நமது அங்கத்தினர்களில் 14 பேர்களை கொண்ட சிறு குழுக்களை ஆரம்பிக்க வேண்டும்.
- ஸ்தல சபை போதகர் மற்றும் சிறு குழு ஒருங்கிணைப்பாளர், இந்த சிறு குழுக்களுக்கு தலைவர்களை நியமித்து அவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கூட்டமும் ஒரு மணி நேரத்துக்குள் அமைய வேண்டும். சிறிய வளர்ச்சி குழுக்கள் ஒரு வேளை நேரடியாக சந்திக்க முயற்சிக்கலாம்.
- சில வளர்ச்சி குழுக்கள் ஒவ்வொரு வாரமும் Zoom வாயிலாக அல்லது Google meet வாயிலாக சந்திக்கலாம்.
- வார நாட்களில் இரவு 8 முதல் 9 வரை கூடலாம் அல்லது சனிக்கிழமை காலையில் கூடலாம்.
- சபையில் நிகழ்ச்சிகள் இல்லாத சமயங்களில் எந்த நேரத்திலும் அவர்கள் கூடலாம்.

<u>ஒரு மணி நேர வளர்ச்சி குழு கூடுதலில் என்ன நடக்கும்?</u>

- தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து ஆழமாக கலந்தாலோசிப்பது.
- சொந்த காரியங்களைப் பற்றி பகிர்ந்துக்கொள்வது.
- ஒருவருக்கொருவர் ஜெபிக்கும் நேரம் இருக்கும்.

<u>வளர்ச்சி குழுக்களின் மேம்பாட்டிலிருந்து நாம் எதை எதிர்பார்க்கலாம்?</u>

- நமது அங்கத்தினர்கள் வேதத்துடன் வெகுவாக இணங்கி இருப்பதையும் தங்கள் சொந்த வாழ்க்கையில் அதன்படி நடப்பதையும் நாம் எதிர்பார்க்கலாம்,
- பெரிய சபைக்கு உள்ளாக 'ஆதரவு குழு' ஒன்று தங்களது ஆவிக்குரிய மற்றும் உணர்ச்சிபூர்வ தேவைகளை சத்திப்பதற்காக வைத்துக்கொள்ள நாம் எதிர்பார்க்கலாம்.
- மற்றவர்களை சீஷராக்கும் ஆவிக்குரிய தலைவர்கள் எழும்ப நாம் எதிர்பார்க்கலாம். அவர்களுக்கு போதித்தும், அவர்களுக்காக ஜெபித்தும், அவர்கள் மேல் அக்கறை செலுத்தும் தலைவர்களாக இவர்கள் அமைவார்கள்.

<u>வேதாகம / போதனை பாடங்கள் எங்கிருந்து வரும்?</u>

- சில சபைகளில் அவர்கள் ஏற்கனவே செய்துக்கொண்டிருக்கும் போதனை பாடங்கள் இருக்கும்.
- தங்கள் ஸ்தல சபைக்கு ஏற்றது என கருதும் பாடங்களை, ஊழிய வாரியம் கொடுத்து உதவும்.
- நமது அனைத்து சபைகளும் வேறுபட்டவைகள். ஒவ்வொரு சபையும் தங்களுக்கு ஏற்ற பாடம் எது என்பதை அறிந்திருக்க வேண்டும்.
- வேதாகம புத்தகங்களிலிருந்து பாடங்கள் அல்லது குறிப்பிட்ட ஆய்வு குறித்தான பாடங்களாகவும் இருக்கலாம்.

<u>நமது ஸ்தல தலைவர்களுக்கு யார் பயிற்சி கொடுப்பார்கள்?</u>

- ஸ்தல சபை போதகரிடம் இதை செய்ய ஒப்படைக்கலாம் என்றாலும், மூப்பர் வாரியமும் இதை எடுத்து செய்ய நல்ல ஒரு வளமாக அமையும்.
- சிறு குழுக்களை ஸ்தல சபைகளில் மேம்படுத்திய பல அனுபவம் கொண்ட DUMC சேர்ந்த டாக்டர் பிரேம் அவர்களும் மற்றவர்களும் நமக்கு உள்ளனர்.
- ஸ்தல சபை அளவில் செய்வது மிக சிறந்ததாக இருப்பினும், பயிற்சிக்காக மாகாண அளவிலான கூட்டமும் சாத்தியம்.
- ஒவ்வொரு ஸ்தல சபையிலும் 3 படிகள் இருக்க வேண்டும். முதல் படி, தலைவர்களை அடையாளம் காணுதல், இரண்டாவது படி, அவர்களுக்கு பயிற்சியளிப்பது. மூன்றாவது படி, ஒவ்வொரு காலாண்டிலும் போதகருடன் கூடி மீள்கருத்து பெற்றுக்கொண்டு அவர்கள் தொடர்ந்து செல்வதற்கு உதவுவது.

<u>ஸ்தல சபை ஐக்கிய குழுக்களின் நிலை என்ன?</u>

- அவர்களது சொந்த ஞாயிறு நிகழ்ச்சிகள் வழக்கமாக நடக்கும், காரணம் இவைகள் 'ஐக்கியங்கள்' இவைகளுக்கு குறிப்பிட்ட வயது மற்றும் ஆண்பெண் என்ற பிரிவும் உண்டு.
- ஆனாலும், வளர்ச்சி குழுக்கள் ஐக்கியங்களுக்கு உள்ளாகவே உருவாகவும் நாம் எதிர்பார்க்கிறோம். உதாரணமாக, ஸ்தல சபை மெவாஐ இரண்டு செயல்பாட்டு குழுக்களை கொண்டிருக்கலாம், மெபெ இன்னும் இரண்டை கொண்டிருக்கலாம், மெஇமுஐ இன்னும் இரண்டை கொண்டிருக்கலாம்.
- வாரத்தில் சந்திக்கும்பொழுது, தலைவரும் இன்னும் ஒருவரும் இந்த குழுக்களுக்கு தலைமை தாங்கலாம்.

<u>வேத ஆராய்ச்சி மற்றும் ஜெப ஜீவியத்தின் நிலை என்னவாகும்?</u>

- ஒவ்வொரு ஸ்தல சபையும் இதை எவ்வாறு செய்வது என்று தீர்மானிக்க வேண்டும்.
- சில குறிப்பிட்ட குழு மக்கள் வாரந்திர ஜெபத்திற்காக சபையில் கூட வாஞ்சிக்கிறார்கள் என்பதை நான் கூற வேண்டும். இதை எந்த வகையிலும் தடுக்கக்கூடாது.

- நமது அனைத்து அங்கத்தினர்களும், ஏதாவது ஒரு சிறிய குழுவை சேர்ந்திருக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து மற்றும் வளர்ச்சி குழுக்களில் ஒன்றிணைந்து ஜெபித்து, வளர்ச்சியடைந்து ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

இது மெதடிஸ்ட் முறையா?

- ஜோன் வெஸ்லியும் ஒரு சிறிய குழுவில் இருந்தார். அது 'பரிசுத்த மன்றம்' (Holy Club) என்று அழைக்கப்பட்டது, அங்கு ஆவிக்குரிய ஊக்கமும், ஆவிக்குரிய பொறுப்பும் முதன்மை குறிக்கோளாயிருந்தன.
- நமது மெதடிஸ்ட் ஒழுங்கில், சிறிய குழுக்களை அமைப்பது மற்றும் மேம்படுத்துவது என்ற குறிக்கோளை குறித்தான ஒரு முழு பகுதியே உள்ளது. (Section XI. Para 143 of the 2016 Discipline).

நமது மாநாட்டு கருப்பொருளான உலகத்திற்கு உப்பாகவும் ஒளியாகவும் இருத்தல் என்பதற்கு இது சம்பந்தப்பட்டதா?

- ஆம். மிகவும்.
- நமது சாரத்தன்மை, நம்முடைய இயல்பான சீஷத்துவத்திலிருந்தும் ஆவிக்குரிய வளர்ச்சியிலிருந்து வருகிறது, இது நமது வளர்ச்சி குழுக்களில் முறையாக நடைபெறுகிறது. நமக்கு சாரத்தன்மை இல்லாதபோது நாம் எப்படி உலகத்திற்கு உப்பாக இருக்க முடியும்.
- நாம் யாரும் நமது சொந்த ஒளியை உண்டாக்க முடியாது. உலகத்தின் ஒளியாகிய இயேசுவுடன் நமக்கு இருக்கும் ஆழமான இணக்கத்திலிருந்து நமது ஒளி வருகிறது. இது வளர்ச்சி குழுக்களிலுமிருந்தும் வருகிறது.

எந்த சபைகளிலாவது வளர்ச்சி குழுக்கள் உருவாக்கப்பட முடியாமல் அல்லது செயல்பட முடியாமல் போகுமா?

- ஆம். இரண்டு முக்கிய காரணங்களினால் இது சாத்தியம்.
- முதலாவது, ஸ்தல சபை உக்கிராணக்குழுவில் இருக்கும் சில தலைவர்கள் ஆவிக்குரிய தலைவர்களாக பயிற்றுவிக்கப்பட தயாராக இல்லை, காரணம் அவர்கள் மற்றவர்களை சீஷராக்க இயலாது அல்லது அதற்கு விருப்பமில்லை. வளர்ச்சி குழுவை தலைமைத்தாங்க மறுப்பதன் மூலம், அவர்கள் ஆலோசனை கொடுக்கும், நிகழ்ச்சிகளை மற்றும் திட்டங்களை தயாரிக்கும், 'நிர்வாக' தலைவர்களாகவே இருந்துவிட விரும்புகிறார்கள்.
- இரண்டாவது, சபை தேவைப்பட்ட மாற்றங்களை செய்யாமல், ஆக்கமாக செயல்படாமல் உள்ளாகவே இருக்க விரும்பி, வளர்ச்சியை நாட ஆர்வமாயிருக்கவில்லை என்று அர்த்தம்.

- மாற்றம் எப்பொழுதுமே கடினமானது. ஆனாலும், நாம் மாற்றமடைய தயாராக இல்லையென்றால், காரியங்கள் படுமோசமான நிலைக்கு சென்றுவிடும். வெளித்தோற்றத்திற்கு பலமாய் தோன்றும், ஆனால் உள்ளுக்குள் பலவீனமாயிருக்கும்.
- ஜனங்கள் தாங்கள் ஆழமாக வளரவும் மற்றவர்களை தங்கள் வரங்களால் வழிநடத்தவும் வேண்டி, சபைகளை விட்டு வெளியேறும் காலத்துக்குள் நாம் வந்துவிட்டோம். வளர்ச்சி குழுக்கள் இவை இரண்டையும் செய்ய அவர்களுக்கு வாய்ப்பளிக்கிறது.
- தலைவர்களால் ஆவிக்குரிய ரீதியில் கவனிக்கப்பட வேண்டி சபைக்கு செல்லும் ஜனங்களும் உண்டு. தலைவர்கள் நிர்வாக திறனை மட்டும் உள்ளவர்களாகவும், மற்ற எதையும் கொடுக்க இயலாததாலும், ஜனங்கள் சபையில் அங்கமாயிருக்க ஆர்வமற்று சபைகளை விட்டு வெளியேறுகிறார்கள்.

<u>அறிக்கை சமர்ப்பிக்கும் முறை மற்றும் கால வரையறை</u>

- நமது அனைத்து ஸ்தல போதகர்களும், உக்கிராணக்குழு அங்கத்தினர்களும் வளர்ச்சி குழுக்களின் உருவாக்கத்திற்கு, தகுந்த வளர்ச்சி குழுக்கள் எண்ணிக்கைக்கு, வேலைகளை தொடங்க உரிமையெடுத்துக்கொள்ள வேண்டும்.
- ஸ்தல சபைகளுக்கு, புதிய அறிக்கை முறை அறிமுகப்படுத்தப்படும், இதில் சிறு குழுக்கள் மையப்படுத்தப்படும்.
- குறிப்பிட்ட கால வரையறை பின்னால் கொடுக்கப்பட்டிருக்கிறது, நாம் வெவ்வேறு நிலைகளில் மேல் விபரங்களை கொண்டு பணியாற்றலாம்.

<u>முடிவுரை</u>

நமது அங்கத்தினர்களின் தேவைகளை சிறு குழு மூலம் சந்திப்பது முற்றும் புதிதல்ல. இயேசு பெரிய ஜனக்கூட்டத்துக்கு ஊழியம் செய்தாலும், அவர் தொடர்ச்சியாக 12 சீஷர்களை தன்னோடு கூட அருகில் வைத்துக்கொண்டு அவர்களை வளர்ச்சிக்குள் நடத்தி வந்தார். நாம் உண்மையாகவே ஸ்தல சபையாக வளர வாஞ்சித்தால், நாம் ஊழியத்தில் புதிய பரிமாணத்தை தழுவ தயாராக இருக்க வேண்டும்.

நமது அனைத்து போதகர்களும் ஜெபத்தோடு நியமிக்கப்பட வேண்டும், நமது உக்கிராணக்குழு தலைவர்கள் யாவரும் அதிகாரம் பெறவும் உற்சாகப்படுத்தப்படவும் வேண்டும், மற்ற புதிய தலைவர்கள் வளர்ச்சி குழு தொகுதியை தலைமைத்தாங்க வேண்டும். இதைத்தான் வேதம் நமக்கு 2 தீமோத்தேயு 2:2ல் கற்றுக்கொடுக்கிறது. போதகர்களாகிய நாம், நமது போதக ஊழியத்தின் இணைப்பு பகுதி இது என்று புரிந்துக்கொள்ள வேண்டும், ஒரு குறிப்பிட்ட சபையில் நமது ஊழிய காலத்தில், இதற்காக நாம் ஆவிக்குரிய நம்பிக்கையான தலைவர்களை கவனமாக உருவாக்க வேண்டும்.

அனைத்து ஸ்தல சபைகளிலும் உள்ள மூப்பர் தலைமைத்துவம், ஆவிக்குரிய பொறுப்பான சிறு குழு சீஷத்துவத்துக்கு, தங்கள் பொறுப்பில் உள்ள ஜனங்களை விசாரிக்க, தங்களை மேம்படுத்திக்கொள்ள எழும்ப வேண்டும். நாம் பயப்படவோ அல்லது தகுதியற்றவர் என்றோ நினைக்கக்கூடாது. கற்றுக்கொடுக்க, ஜெபிக்க, நமது கீழ் உள்ளவர்களை கவனிக்க, நமக்கு தேவைப்படும் கிருபையை தேவன் நிச்சயமாக தந்தருளுவார். தேவன் நம்மை

இம்மாதிரியான ஊழியத்துக்கு அழைக்கும்போது, அவர் எப்பொழுதுமே நம்மோடு கூட இருந்து, இதை நாம் கடந்து செல்ல செய்வார்.

நன்றி, கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

அவரது கிருபையில்,
டென்னிஸ் ராஜ்

| | 2022 | | | 2023 | | | | | | | | | | | | 2024 | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | Q4 | | | Q1 | | | Q2 | | | Q3 | | | Q4 | | | Q1 | | | Q2 | | | Q3 | | | Q4 | | |
| | Oct | Nov | Dec | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec | Jan | Feb | Mar | Apr | May | Jun | Jul | Aug | Sep | Oct | Nov | Dec |
| **Advocacy of vision** | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| *Bishop's Address* | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| *Dist Pastor's Fellowship* | | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| *Lay Leaders* | | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| *Agencies Board Retreat* | | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| *Local Conference / LCEC* | | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| *Publicity Materials* | | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Leaders Identified | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | |
| Training | | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | | | | |
| Materials | | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | |
| Evaluating Material | | | | | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | | | | |
| Grouping | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | |
| Modelling (Existing) | | | | ■ | ■ | ■ | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Rolling out GG | | | | | | | | | | | | | | | | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ | ■ |
| General Evaluation | | | | | | | | | | | | | | | | | | | | | | ■ | ■ | ■ | | | |